**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – பாடம் *24*

## மிலேனியம் *(Millennium) Part 02*

### *2.* சாத்தானை நீக்கி மேலும் அவனை பிணைத்தல்

**வெளி** ***20:1-2,*** *[1]ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும்
பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு
வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன்.*
*[2]பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான்.*

**பாதாளம் *(SHEOL/HADES)***

இறப்பின் போது, இறந்தவரின் உடல் நேரடியாக பாதாளத்திற்கு செல்கிறது. வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு வரும் வரை அவர்கள் அங்கே துன்பப்படுவார்கள். வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு வந்த பின் அவர்கள் உயிர்த்தெழுந்து அக்கினிக் கடலுக்குள் தள்ளப்படுவார்கள்.

ஏற்கெனவே இறந்து போனவர்கள் அனைவரின் ஆத்துமாக்களும் இப்பொழுது அங்கே உள்ளன; பாவங்களில்

*மரிக்கிறவர்கள் உடனடியாக அவர்களைச் சேர அங்கு செல்வார்கள்.*

*ஷியோல் (Sheol) என்ற பழைய ஏற்பாட்டு வார்த்தைக்கு ஈடான புதிய ஏற்பாட்டு வார்த்தை ஹடெஸ் (Hades) என்பதாகும். கிரேக்கம் மற்றும் எபிரேய வார்த்தை இரண்டுமே தற்போதைய பாதளம் (Hell) என்ற ஒரே இடத்தை தான் குறிப்பிடுகிறது. எனினும், இது சிக்கல் வாய்ந்தது. ஏனென்றால் ஷியோலில் (Sheol) பெரும்பாலும் "நரகம்" இருப்பதால் அதை "கல்லறை" என மொழிபெயர்த்துள்ளனர். மேலும் சிலர் ஹடெஸ் (Hades) மற்றும் ஷியோலை (Sheol) பாதாளத்திற்கு பதிலாக கல்லறைக்கான ஒரே சான்றாக தவறாக பயிற்றுவிக்கிறார்கள். இந்த தவறான போதனையினால் உடனடியான அல்லது தற்போதைய நரகத்தின் இருப்பை மறுக்க வழிவகுக்கிறது. இந்த பிழையிலிருந்து ஆத்மாவின்-தூக்கம் என்ற தவறான கோட்பாடு, மேலும் இறப்பு மற்றும் உயிர்த்தெழுதலுக்கு இடையிலான இறந்தவரின் மயக்க நிலைமையைக் கற்பிக்கும் மற்றும் பிற கருத்துகள் தோன்றுகின்றன.*

*பழைய ஏற்பாட்டில் "கல்லறைக்கு" பயன்படுத்தப்படும் பொதுவான வார்த்தை கியூபர் (queber) என்பதாகும். பயன்படுத்தப்பட்ட அறுபத்திநான்கு முறைகளில் அதை,*

*முப்பத்திநான்கு முறை "கல்லறை" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது,*

*"ஸ்பெல்ச்சர்" ("sepulcher") என இருபத்தியாறு முறையும், மேலும்*

*"புதைக்கும் இடம்" என நான்கு முறையும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

*கியூபர் (queber) என்ற வார்த்தை ஐந்து முறை கூடுதலாக கிப்ரோத்-ஹட்டாவாஹ் (Kibroth-hattaavah) என்ற இடத்திலுள்ள பகுதியின் பெயராகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் "காமத்தின் கல்லறை" என்பதாகும்.*

*ஷியோல் (Sheol) என்ற வார்த்தை அறுபத்தினான்கு முறை காண்பிக்கப்பட்டுளது.*

*"கல்லறை" என்ற வார்த்தை முத்தியோறு முறையும்,*

*"பாதாளம்" என்ற வார்த்தை முத்தியோறு முறையும், மேலும்*

*"குழி" என்ற வார்த்தை மூன்று முறையும் பயன்படுத்தப்பட்டுளது*

*ஷியோலையும் (Sheol) கியூபரையும் (queber) எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என ஒப்பீடு ஒன்று செய்யும்போது இரண்டுக்கும் உண்டான முரண்பாடு வெளிப்படுகிறது. இது இரண்டும் ஒன்றானது அல்ல என்பதை நமக்கு கூறுகிறது.*

1. *ஷியோலை (Sheol) எப்போதும் பன்மையில் பயன்படுத்தப்படவில்லை. கியூபரை (queber) 29 முறை பன்மையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

2. *உடல் ஷியோலுக்கு (Sheol) செல்லும் என்று எப்போதும் குறிப்பிடப்படவில்லை. கியூபருக்குள் (queber) உடல் செல்வதைப் பற்றி 37 முறை குறிப்பிடப்பட்டுள்ளது.*

3. ஷியோல் *(Sheol)* பூமியில் இருப்பது போல எங்கும் குறிப்பிடப்படவில்லை. கியூபர் *(queber)* 32 முறை பூமியில் இருப்பது போல குறிப்பிடப்பட்டுள்ளது.

4. ஒவ்வொருவருக்கான தனிப்பட்ட ஷியோலை *(Sheol)* பற்றி எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஒவ்வொருவருக்கான தனிப்பட்ட கியூபர் *(queber)* உள்ளது என்பதை 5 முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

5. மனிதர்கள் யாரையும் ஷியோலுக்குள் *(Sheol)* போட்டதாக குறிப்பிடப்படவில்லை. மனிதர்கள் ஒரு தனி நபரை கியூபருக்குள் *(queber)* போட்டதாக 33 முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

6. மனிதர்கள் யாரும் ஷியோலை *(Sheol)* தோண்டி அல்லது முறையாக வடிவமைத்தது போல எங்கும் குறிப்பிடப்படவில்லை. மனிதர்கள் கியூபரை *(queber)* தோண்டி அல்லது முறையாக வடிவமைத்தது போல 6 முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

7. மனிதர்கள் யாரும் ஷியோலை *(Sheol)* தொட்டதாக குறிப்பிடப்படவில்லை. மனிதர்களால் கியூபரை *(queber)* தொடவும் அல்லது தொட்டதாகவும் குறிப்புகள் உள்ளன (5 முறை).

8. மனிதனால் ஷியோலை *(Sheol)* உடையதாக ஆக்கிக்கொள்ள முடியும் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை. மனிதனால் கியூபரை *(queber)* உடையதாக ஆக்கிக்கொள்ள முடியும் என்று 7 முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

*(இந்த எட்டு ஒப்பீடுகளையும் காலேப் ஜே. பேகர் (Caleb J. Baker) என்றவரின் "வாழ்வும் சாவும்" என்ற புத்தகத்தை தழுவி எடுக்கப்பட்டுள்ளது. இந்த புத்தகம் பைபிள் இன்ஸ்டிட்யூட் கோல்போர்டேஜ் ஆஸ்ஸோஸியேஷனில் (Bible Institute Colportage Ass'n) 1941 இல் வெளியிடப்பட்டுள்ளது).*

## இறுதியான பாதாளம்

*அக்கினிக் கடல் அல்லது பாதாளம் என்பது, ஒரு நித்திய அக்கினியின் இடமாக இருக்கிறது. இதனை முதன்முதலில் தேவன் தன்னை எதிர்த்து கலகத்தில் ஈடுபட்ட சாத்தானையும் அவனை பின்பற்றிய தேவதூதர்களையும் தண்டிக்கும் இடமாக உருவாக்கினார் (மத்தேயு 25:41).*

*ஏனென்றால் அந்த இடத்தை "வெளிப்புற இருள்" என்று குறிப்பிடப்படுகிறது (மத்தேயு 8:12; 25:30). இது பெரும்பாலும் படைப்பினால் நெருங்க முடியாத தூரத்திலே அமைந்துள்ளது.*

*வேதாகமத்தில் கெஹனா (Gehenna) என்பதை "அக்கினிச் சூளை" என்று விவரிக்கப்பட்டுள்ளது (மத்தேயு 13:42);*

*"நித்திய ஆக்கினை" (மத்தேயு 25:46)*

*"காரிருள்" (II பேதுரு 2:17);*

*"இரண்டாம் மரணத்தினால் வரும் சேதம்" (வெளி 2:11; 20:6,14; 21:8);*

*"அக்கினியும் கந்தகமுமான கடல்" (வெளி 19:20; 20:10; 21:8).*

*நரகத்தை தேவன் சாத்தானுக்காகவும் அவனுடன் விழுந்து போன தேவதூதர்களுக்காகவும், மனிதகுலத்தை சேர்ந்த எல்லா வயதினருக்காகவும் கடும் வேதனை நிறைந்த அந்த இடத்தை*

*உருவாக்கினார். "அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" (மத்தேயு 13:42). இது தான் தங்களுடைய பாவங்களில் இறப்பவருக்கான "நித்திய வெகுமதி".*

*இப்போது அந்த அக்கினி கடலிலே யாரும் இல்லை. ஆனால் ஒருநாள் அது திரளான கூட்டத்தை கொண்டிருக்கும்.*

*நீதியுள்ள தண்டனைக்கு பின் இந்த இடத்தில் முதலில் குடியிருப்பவர்கள் சாத்தான் (அந்திகிறிஸ்து) மற்றும் கள்ள தீர்க்கதரிசிகள் ஆகும். அவர்களை உபத்திரகாலத்தின் இறுதியில் "உயிருடன் அக்கினியும் கந்தகமுமான கடலில் தள்ளப்படுவார்கள்" (வெளி 19:19-20).*

*உபத்திரவத்தில் பிழைத்த இரட்சிக்கப்படாத பல நாடுகளை சேர்ந்த மக்களும் அவர்களுடன் இணைந்து கொள்வார்கள் (மத்தேயு 25:31-32,41-46).*

*மேலும் இயேசு கிறிஸ்து பூமிக்கு மீண்டும் வரும்போது, கலகம் செய்த இஸ்ரவேலர்கள் அதாவது, உபத்திரவத்தில் பிழைத்த இயேசுவின் மீது நம்பிக்கையற்ற யூதர்களுக்கு மிலேனியல் ராஜ்யத்திற்குள் (Millennial Kingdom) நுழைய அனுமதி மறுக்கப்படும். அவர்கள் தங்கள் புறஜாதியாரான சகாக்களை "நித்தியா அக்கினியில்" இணைவார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை (எசேக்கியேல் 20:33-38; மத்தேயு 7:21-23; மத்தேயு 24:29-31,45-51).*

*பிறகு இயேசு கிறிஸ்துவின் மிலேனியல் ராஜ்யத்தின் (Millennial Kingdom) இறுதியில், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே சாத்தானும் தள்ளப்பதுவான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" (வெளி 20:10).*

*இறுதியாக, இரட்சிக்கப்படாமல் இறந்த அனைத்து வயதினரும் உயிர்த்தெழுந்து மேலும் மகா வெள்ளை சிங்காசனத்தில் இயேசு கிறிஸ்துவால் நியாயத்தீர்ப்பு வழங்கப் பெற்று அதன்பின் அக்கிக்கடலிலே தள்ளப்படுவார்கள் (வெளி 20:11-15).*

*கெஹென்னா (Gehenna) என்ற பெயர் எருசலேமின் தெற்கே ஆழமான குறுகலான பள்ளத்தாக்கில் இருந்து வருகிறது. இராஜாக்களின் காலத்தின் போது அங்கே உள்ள எபிரேய பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளை அம்மோனியரின் தெய்வமாகிய மொலேகுக்கு (Molech) பலி செலுத்தி வந்தனர் (2 இராஜாக்கள் 16;3; 2 நாளாகமம் 28:1-3; லேவியராகமம் 18:21; 1 இராஜாக்கள் 11:5,7,33).*

*இந்த புரஜாதியினரின் தெய்வத்தை மல்காம் (Malcham), மில்காம் (Milcom), மற்றும் மொலோக் (Moloch) என வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பள்ளத்தாக்கு பின்னர் நகரத்தின் அடைப்பாக (dump) பணியாற்றியது. ஏனெனில் அங்கு தொடர்ச்சியாக எரித்துக் கொண்டிருந்தனர். அது துன்மார்க்கருக்கான தண்டனைக்குரிய ஒரு சின்னமாக மாறியது. அது "ஹிந்நோமின் பள்ளத்தாக்கு" ("Valley of Hinnom") என அழைக்கப்பட்டது. இதை கிரேக்க மொழியில் கெஹனா (கெஹென்னா) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.*

*புதிய ஏற்பாட்டில் காணப்படும் வார்த்தையானது அந்த காலப்பகுதியில் நரகத்திற்கு பொதுவாகப் பயன்படுத்தப்படும் வெளிப்பாடாக இருப்பதை தெளிவாகக் காட்டுகிறது.*

*இந்த வார்த்தை வேதாகமத்தில் பன்னிரண்டு முறை காணப்படுகிறது. பதினோறு முறை தேவனாகிய*

இயேசுவினாலும் ஒரு முறை யாக்கொபினாலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாம் சூழலை கருத்தில் கொள்ளும்போது, தேவன் இந்த வார்த்தையை துன்மார்க்கராக இறந்தவர்களுக்கான நித்திய தண்டனை அளிக்கப்படும் இடத்தைப் பற்றி குறிப்பதற்காக பயன்படுத்தினார் என்பதும் நகரத்தின் அடைப்புக்கு *(dump)* அல்ல என்பதும் தெளிவாகுகிறது.

கெஹனா *(Gehenna)* அல்லது அக்கினி கடலை வருங்காலம் அல்லது இறுதியான நரகத்தை குறிக்க பயன்படலாம். ஏனெனில் அங்குதான் அனைத்து வயதையும் சேர்ந்த துன்மார்க்கர்கள் இறுதியாக சென்றடைவார்கள். சாத்தானும், விழுந்த தேவதூதர்களும், மனிதகுலத்தில் தொலைந்தவர்கள் அனைவரும் அங்கே எப்போதும் என்றென்றும் துன்புறுத்தப்படுவார்கள்.

## டார்டாரஸ் (TARTARUS)

அபோஸ்தலராகிய பேதுரு டார்டாரஸ் *(Tartarus )* என்ற இந்த வார்த்தையை "பாவம் செய்த தேவதூதர்களை" குறிக்க பயன்படுத்தினார். அவர்களை தேவன் பாதாளத்திற்கு *(Sheol/Hades)* நியாத்தேர்ப்பு வரும் வரைக்கும் அங்கு இருக்கும் படிக்கு அனுப்பி வைத்தார் *(2* பேதுரு *2:4).* "நரகம்" என்று கே.ஜே.வி. இல் *(KJV)* மொழிபெயர்க்கப்பட்ட இந்த வார்த்தை கிரேக்க புராணங்களில் மோசமான துன்மார்க்கரை தண்டிக்கும் இடத்தை குறிக்க பயன்படுத்தப்படுகிறது.

பேதுரு இந்த வார்த்தையை பாதாளத்தை *(Sheol/Hades)* குறிக்க பொதுவாக பயன்படுத்தினாரா அல்லது பாதாளத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட தனியறையை குறிக்க பயன்படுத்தினாரா என்பது தெளிவாக தெரியவில்லை. அந்த தனியறைகளில்

*இறுதி தீர்ப்புக்காக காத்திருக்கும் ஒரு குறிப்பிட்ட வகுப்பை சேர்ந்த விழுந்துபோன தேவதூதர்களை சிறைவைக்கப்பட்டுள்ளனர். பாதாளத்தின் (Sheol/Hades) இருப்பு மற்றும் நோக்கம் பற்றிய ஒட்டுமொத்த வேதாகமத்தின் போதனையுடன் இது ஒத்திருக்கிறது.*

*அதனால் தயவு செய்து இதனை தெளிவாக புரிந்து கொள்ளுங்கள்.*

*யாரும் நரகத்திலோ அல்லது அக்கினிக் கடலிலோ தற்போது இல்லை.*

*சாத்தான் தற்போது உள்ள நரகத்திற்கு செல்ல மாட்டான். மேலும் அவன் நேரடியாக அக்கினி கடலிலே தள்ளப்படுவான்.*

*நரகத்திற்குள் முதலில் நுழைபவர்கள் அந்திகிறிஸ்து மற்றும் கள்ள தீர்க்கதரிசிகளே ஆகும்.*

*ஆதியாகமம் 6ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாவம் செய்த தேவதூதர்களை படுகுழியில் (Abyss) பிணைத்து வைக்கப்பட்டுள்ளனர்.*



Your Earth Life
James 2:26
Eccl. 12:7
Death
Hades/Sheol
Second Coming
The End
The Second Coming of Christ,
Heb. 9:28; 1 Thes. 4:13-18;
2 Thes. 1:7-9
Resurrection of All Dead, 1 Cor. 15.
End of the World and Works, 2 Pet. 3.
The Righteous Judgment of All
HEAVEN
Eternal Life
Day, Rev. 21:25
1 Peter 1:4
ALL Humans
Salvation Your Free Gift
Church of Christ
Kingdom of Christ
2 Corinthians 5:17
Salvation
Baptism
Confession
Repentance
Faith
Hear
Col 1:13
LOST SINNER
SIN
Lust
Sin
Death
James 1:13-16
Faithful Till Death
Good Seed, Good Soil: Mt 13
Infants: Mt 18:3
Unfaithful Who Fell Away
Bad Seed, Rocky & Weedy Soil
All Non-Christians: 2 Thes 1:8-9
Bad Seed, Pavement
GRAVE
PARADISE
ABRAHAMS'S BOSOM
Luke 16:22-23
Acts 2:22-36 (Esp. 27, 31)
Luke 23:43
Matthew 16:18
Infants, Mat. 19:14; Children, Mark 10:14
GREAT GULF
No Crossing
Luke 16:26
Luke 16:23, 28
Jude 6
2 Peter 2:4, 9
TORMENT, ANGUISH, FLAME
TARTARUS
Resurrection of Saved
Resurrection of Lost
Dan. 12:2
John 5:28-29
Acts 24:15
Heb. 9:27
Mat. 7:21-23
Mat. 25:31-46
Luke 20:34-35
Acts 17:30-31
Judgement
Rev. 20:11-15
2 Cor. 5:10
Rom. 14:10-12
Jude 14-15
"Enter"
"Depart"
The Two Groups
Stay This Way Forever,
Rev. 22:11
HELL
The Second Death;
the Wicked are Separated
From the Lord Forever.
Gehenna
Mat. 10:28; Mark 9:43-48;
Rev. 14:11; 19:20; 20:10.
Eternal Death
LOST
Note: All Knee's Bow
to God At Judgment,
Romans 14:10-11.
For He Alone Holds the
Keys to Death and Hades,
ref. Rev. 1:18.
1 Cor. 15:55
Philip. 3:20-21
1 John 3:2

*சாத்தான் 1,000 ஆண்டுகளுக்கு படுகுழியில் (Abyss) பிணைத்து வைக்கப்படுவான்.*

*அதற்கு பிறகு அவன் தன்னுடைய இறுதியான முயற்சியை செய்வதற்கு சிறிது காலத்திற்கு முன் விடிவிக்கப்படுவான். அதற்கு பிறகு அவன் அக்கினி கடலிலே தள்ளப்படுவான்.*

***வெளி 20:1-2,*** *[1]ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன். [2]பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான்.*

*எனவே தேவதூதன் சாத்தானை ஆயிரம் வருடங்களுக்கு கட்டி வைப்பான்.*

*சாத்தான் = பழிதூற்றுபவன் = குற்றம் சாட்டுபவன்*

***ஏசாயா 24:21-23,*** *[21]அக்காலத்தில் கர்த்தர் உன்னதமான சேனையை உன்னதத்திலும், பூமியின் ராஜாக்களைப் பூமியிலும் விசாரிப்பார். [22]அவர்கள் கெபியில் ஏகமாய்க் கட்டுண்டவர்களாகச் சேர்ந்து காவலில் அடைக்கப்பட்டு, அநேகநாள் சென்றபின்பு விசாரிக்கப்படுவார்கள். [23]அப்பொழுது சேனைகளின் கர்த்தர் சீயோன் மலையிலும் எருசலேமிலும் ஆளுகைசெய்வதால், சந்திரன் கலங்கும், சூரியன் நாணமடையும்; அவருடைய மூப்பர்களுக்கு முன்பாக மகிமை உண்டாயிருக்கும்.*

***வெளி 20:2,3,*** [2]*பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான். [3]அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும்.*